**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT,  KARUR**
**CC 19/2026**

**Deposition of Witness    LW6 /PW5**

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி.S.பாரதி, காவல் உதவி ஆய்வாளர். | Taluk | |
| Father's Name | சேகர் | Village | |
| Age | 29 | Calling | காவல் உதவி ஆய்வாளர் |
| **Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 07.07.2026.** | | | |

**எதிரி ஆஜரில்லை. பிரிவு 355BNSS ன்படி மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல்விசாரணை** :

1) நான் வெங்கமேடு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.01.2026 ம் தேதி காலை 09.00 மணிக்கு பெரியகுளத்துப்பாளையம் பிள்ளையார் கோவில் தெருவில் வசிக்கும் பரமசிவம் மனைவி பங்கஜவள்ளி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று வெங்கமேடு காவல் நிலைய குற்ற எண் 13/26 ச/பி.. 296(b),351(3) BNS மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **அந்த முதல்தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் அன்றைய தினமே காலை 10.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மகேஷ் மற்றும் கோகிலா ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். **அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி அதே சாட்சிகள் முன்னிலையில் 10.30 மணிக்கு சுமார் 47 செ.மீ நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய அருவாள் ஒன்றை

Sd/-T.Wajitha Thabassm
**நீதித்துறை நடுவர்,**
**கூடுதல் மகிளா நீதிமன்றம்,**
**கரூர்.**

கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன்.

2) பின்னர் மேற்படி சாட்சிகளை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரியை தேடிவந்த நிலையில் பெரியகுளத்துப்பாளையம் லீலா கார்டன் அருகில் நின்றுகொண்டிருந்த எதிரி வசந்தகுமார் என்பவரை அன்றையதினமே 13.00 மணிக்கு கைது செய்வதற்கான காரணம் கூறி கைது செய்து எதிரியை தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் இவ்வழக்கில் வாதி பங்கஜவள்ளி மற்றும் கண்ணுற்ற சாட்சியான சதீஸ்குமார், விஜயக்குமார் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நிதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **அந்த படிவம் 91 அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் எதிரி மீது 22.01.2026 ம் தேதி சட்டப்பிரிவுகள் ச/பி.. 296(b),351(3) BNS மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின்படி குற்ற இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) சம்பவம் குறித்து புகார்தாரர் எனக்கு எப்போது புகார் கொடுத்தார் என்றால் 14.01.2026 ம்தேதியன்று காலை 9.00 மணிக்கு கொடுத்தார். புகார் கொடுக்க யார் யார் வந்தார்கள் என்று தெரியுமா என்றால் புகார்தாரருடன் 4, 5 நபர்கள் வந்தார்கள். புகார் கொடுப்பதில் காலதாமதம் ஏற்பட்டது குறித்து புகார்தாரரிடம் கேட்டேனா என்றால் கேட்டேன். தாமதம் ஏற்பட்டதற்கான காரணம் குறிப்பிட்டுதான் புகார் கொடுத்தாரா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்படும் இடம் ஒரு பொதுவழிசாலை என்றால் சரிதான். புகார் கொடுப்பதற்கு முன்பே சம்பவ இடத்திற்கு போய் பார்வையிட்டேனா என்றால் நான் செல்லவில்லை, SSI குமார் சென்று பார்த்தார். SSI குமார் என்பவரை இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவத்தில் குறிப்பிடப்படும் மரம் அ.சா.1 ற்கு சொந்தமான இடத்தில் இல்லை என்றால்சரிதான். ஆனால் அ.சா.1 தான் மேற்படி மரத்தை வளர்த்தார்.

2) இவ்வழக்கு சொத்தை பொது இடத்தில் இருந்துதான் கைப்பற்றினோம்

Sd/-T.Wajitha Thabassm

**நீதித்துறை நடுவர்,**
**கூடுதல் மகிளா நீதிமன்றம்,**
**கரூர்.**

என்றால் சரிதான். சம்பவம் நடந்தஅன்று எந்த ஒரு சான்று பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் செய்த இடம் பொது இடம் என்பதால் பொது மக்கள் அதிகம் நடமாடுவார்கள் என்றால் சரிதான். மேற்படி சம்பவ இடத்தை எவ்வாறு கண்டுபிடித்தோம் என்றால் மரம் அங்குதான் வெட்டப்பட்டிருந்தது. சம்பவ இடத்தில் வெட்டப்பட்ட மரம் தவிர வேறு எந்த ஆதாரமும் இல்லை என்றால் சரியல்ல. கைப்பற்றபட்ட அரிவாளை மேற்படி வெட்டப்பட்ட மரத்தின் கீழிருந்துதான் கைப்பற்றினோம். சம்பவம் நடந்த மறுநாள்தான் கைப்பற்றினோம் என்றால் சரிதான். கைப்பற்றுதலின்போது புகைப்படம் அல்லது வீடியோ எதுவும் பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை. ஆஜர் எதிரியையும், கைப்பற்றப்பட்ட அரிவாளையும் சம்மந்தப்படுத்தும் எவ்வித ஆதாரமும் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சாட்சிகள் அ.சா.2 சதீஷ்குமார், அ.சா.3 விஜயகுமார் ஆகியோர் கூறியதின்அடிப்படையில்தான் அரிவாளை கைப்பற்றினோம்.

3) இவ்வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள சாட்சிகள் அனைவரும் அ.சா.1ன் ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். இவ்வழக்கில் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லை என்றால் சரியல்ல. சாட்சி விஜயகுமார் தனிநபர் சாட்சிதான். அ.சா.1னிடமிருந்து பொய்யான புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சரிவர புலன் விசாரணை செய்யாமலும், அடிப்படை ஆவணங்கள் எதுவுமின்றி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/-T.Wajitha Thabassm

**நீதித்துறை நடுவர்,**

**கூடுதல் மகிளா நீதிமன்றம்,**

**கரூர்.**